

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில், உடல் நலக்குறைவால் உயிரிழந்த தூத்துக்குடி வடக்கு மாவட்ட மகளிரணி துணை அமைப்பாளர் தமிழ்ச்செல்வி அவர்களின் இல்லத்திற்கு நேற்று (17.06.2024) தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி சென்று அவரது படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளரும், சமூக நலன் – மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான கீதா ஜீவன், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, கோவில்பட்டி நகரசபை தலைவர் கருணாநிதி ஆகியோர் உடனிருந்தனர்.

### மன்னார்குடி பட்டாசு ஆலை வெடிவிபத்தில் உயிரிழந்த

# சதீஷ்குமார் குடும்பத்தாருக்கு ஆறுதல்: ரூ.3 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 18-

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி, பாமணி வருவாய் கிராமம், வெள்ளங்குழி அருகே இயங்கி வந்த தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் உயிரிழந்தவரின் குடு ம்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் ரூபாய் 3 லட்சம் நிதியுதவி - வழங்குவது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், பாமணி வருவாய் கிராமம், வெள்ளங்குழி (தேவேந்திரபுரம்) என்ற இடத்தில் இயங்கிவந்த தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் நேற்று முன்தினம் (16.06. 2024) பிற்பகல் 1.45 மணியளவில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் சதீஷ்குமார் (வயது 34) த/பெ. மனோகரன் என்பவர் பலத்த தீக்காயங்களுடன் மன்னார்குடி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும், வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### குவைத் தீ விபத்தில் உயிரிழந்த

# முட்டம் சின்ன துரை குடும்பத்திற்கு ரூ.5 லட்சம் நிதி!

## குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வழங்கினார்!

கடலூர், ஜுன் 18 -

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் குவைத் தீ விபத்தில் உயிரிழந்த சின்னதுரை குடும்பத்தினருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கான காசோலையை வழங்கினார்

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டம், முட்டம் கிராமம் மேலத்தெருவைச் சேர்ந்த சின்னதுரை த/பெ.கிருஷ்ணமூர்த்தி (வயது 42) என்பவர் குவைத் நாட்டில் கடந்த 12.06.2024 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் மரணம் அடைந்தார்.

ஒன்றிய, மாநில அரசுகளின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முயற்சியினால் குவைத் நாட்டிலிருந்து சின்னதுரையின் உடல் வரவழைக்கப்பட்டு கடந்த 15- 06- 2024 அதிகாலை 1.00 மணியளவில் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டு, நல்லடக்கம் செய்யப்பட்டது.

மேற்படி சின்னதுரை குடும்பத்தினருக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ரூ 5,00,000 (ஐந்து லட்சம்) நிவாரண தொகை உடனடியாக வழங்க உத்தரவிடப்பட்டது.

அதனடிப்படையில் நேற்று முன்தினம் (16- 06- 2024 ) அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் அ.அருண் தம்புராஜ் முன்னிலையில் சின்னதுரை மனைவி திருமதி சத்யாவுக்கு ரூபாய் 2,50,000 (இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் ) மற்றும் தாய் திருமதி சரோஜாவுக்கு ரூபாய் 2,50,000 (இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் ) என ரூபாய் 5,00,000க்கான காசோலையை வழங்கி ஆறுதல் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சார் ஆட்சியர் சிதம்பரம் செல்வி ரஷ்மிராணி, மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

### தென்காசி வடக்கு மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர்

# கேபிள் செந்தில்குமார் இல்ல திருமண விழா!

## கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி நடத்தி வைத்தார்!

தென்காசி, ஜுன் 18 -

தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மேலநீலிதநல்லூர் கிழக்கு ஒன்றியம் குருக்கள்பட்டி அபிஷேக் மஹாலில் மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் கேபிள் செந்தில்குமார் இல்ல திருமண விழாவில் கழக துணைப் பொதுச் செயலாளரும்,மக்களவை மாநிலங்களவை கழக நாடாளுமன்றக் குழு தலைவரும்,தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் பங்கேற்று திருமணத்தை நடத்தி வைத்தார்.

சங்கரன்கோவில் தொகுதி மேலநீலிதநல்லூர் கிழக்கு ஒன்றியம் குருக்கள்பட்டி அபிஷேக் மகாலில் தென்காசி வடக்கு மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் செந்தில்குமார் மைத்துனர் ராஜேந்திரன் சகோதரி இசக்கியம்மாள் ஆகியோரது மகன் ஆர்.மதிச்செல்வம், செல்லப்பாண்டிராசாத்தி ஆகியோரின் மகள் சி.சிந்துஜா ஆகியோர்களது

திருமண நிகழ்வில் கழக துணைப் பொதுச் செயலாளர் தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பங்கேற்று சுயமரியாதை திருமணத்தை நடத்தி வைத்தார்.

இந்த திருமண நிகழ்வு தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ தலைமையில் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன்,மாவட்ட பொருளாளர் இல.சரவணன் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தங்கவேலு யு.எஸ்.டி.சீனிவாசன், பரமகுரு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மேல நீலிதநல்லூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பெரியதுரை வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் சுயமரியாதை திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி பேசியதாவது.

இந்த திருமணத்தை உற்றார் உறவினர்கள் அன்புத் தலைவர் கலைஞரின் உடன்பிறப்புகள் புடை சூழ திருமணத்தை வெகு சிறப்பாக நடத்தி வைத்ததில் மட்டற்ற மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

தற்போது நடைபெற்ற இந்த திருமணமானது சுயமரியாதை திருமணம் ஆகும்.தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா,முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோர் வழிவந்த சுய மரியாதை திருமணம்.சுயமரியாதை திருமணத்தில் ஆணும் பெண்ணும் சமம் இரண்டு பேரும் நிகரானவர்கள். மணமக்கள் மன நிறைவோடு வாழ வேண்டும்.யாரும் யாருக்கும் அடிமை இல்லை.

ஒடுக்கப்பட்ட,ஒதுக்கப்பட்ட, ஏழை,எளிய மக்கள் தற்போது பட்டப் படிப்பு முடித்து வசதி வாய்ப்பாக இருக்கிறார்கள். என்றால் அதற்கு போராடிய இயக்கம் திராவிட இயக்கம். அதை முன்னேற்றிக் காட்டியது திராவிட முன்னேற்றக் கழகம் ஆகும்.

கலைஞர் அவர்கள் ஆட்சியின் நீட்சியாக அண்ணன் தளபதி அவர்கள் தமிழகத்தில் சிறப்பான ஆட்சி நடத்தி வருகிறார்கள்.40 ம் நமதே என்று வெற்றி பெற்றுள்ளோம். அந்த வெற்றி எல்லோருக்குமான வெற்றி ஆகும்.

இன்றைய கால இளைஞர்கள் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் தமிழக முதல்வர் அண்ணன் தளபதி ஆகியோரின் சிந்தனைகளையும்,உழைப்பையும் வருங்கால தலைமுறைகளுக்கு கொண்டு செல்லும் பணி இருக்கிறது.

**தலை நிமிர்ந்து நடக்க வேண்டும்.**

சாதியின் பெயரால், மதத்தின் பெயரால் பிரிவினை ஏற்படுத்தக் கூடியவர்களை அடையாளம் கண்டு அவர்களை அகற்ற வேண்டும்.இந்த சமூகம் உறுதுணையாக இருக்க வேண்டும். இந்தப் பணியை நிச்சயமாக ஆற்ற வேண்டும்.மணமகன் மணமகள் இருவரும் வாழ்வாங்கு வாழ வேண்டும்.

இவ்வாறு கழகதுணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி.அவர்கள் பேசினார்கள்.

நிகழ்வில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணி ஸ்ரீ குமார், மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் செண்பக விநாயகம் சங்கர நாராயணசுவாமி கோயில் அறங்காவலர் குழு தலைவர் து.சண்முகையா, பொதுக்குழு உறுப்பினர் தேவதாஸ்,ஒன்றிய செயலாளர்கள் லாலா சங்கரபாண்டியன், கடற்கரை, சேர்மதுரை, கிறி ஸ்டோபர், பால்ராஜ்,ராமச்சந்திரன், சங்கரன்கோவில் நகர செயலாளர் பிரகாஷ்,நகர் மன்ற தலைவர் உமா மகேஸ்வரி சரவணன், மாவட்ட அணி அமைப்பாளர்கள் இளைஞர் அணி முகேஷ்,மாணவர் அணி உதயகுமார், மகளிர் அணி சிவசங்கரி, ம.தி.மு.க. துணை பொதுச்செயலாளர் தி.மு. ராஜேந்திரன், வடக்கு மாவட்ட செயலாளர் சுதா பாலசுப்பிரமணியன், மூவேந்தர் முன்னேற்ற கழகம் மூர்த்தி, தி.மு.க.இளைஞர் அணி துணை அமைப்பாளர் சரவணன் உள்பட கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் குருக்கள்பட்டி கிளைச் செயலாளர் சுகுமாறன் நன்றியுரையாற்றினார்.

அதன் பின்னர் மேலநீலிதநல்லூர் திருமலாபுரம் ஊராட்சியில் திருவனந்தபுரம் கிளைக் கழகச் செயலாளர் எஸ்.பி.முருகன் அவர்களின் புதுமனை புகுவிழாவில் கழக துணை பொது செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் பங்கேற்று ரிப்பன் வெட்டி திறந்து வைத்து முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.அதனைத் தொடர்ந்து கழகக் கொடியை கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் ஏற்றி வைத்தார்கள்.

இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனைப்படி - கூட்டுறவுத் துறை சார்பில்

# வேளாண் இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கப்படும்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு

சென்னை, ஜுன் 18-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கூட்டுறவுத்துறை நிறுவனங்கள் மூலம் விவசாயிகளின் பயன்பாட்டிற்காக விவசாய இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகைக்கு தரப்படும் என கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் தகவல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்புல் தெரிவித்துள்ளதாவது :

தமிழ்நாடு அரசு கூட்டுறவுத் துறையில் உள்ள 4456 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், 115 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு தேவையான கடன்கள் வழங்குதல், உரம் உள்ளிட்ட இடுபொருள்கள் வழங்குதல் ஆகிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

கூட்டுறவுத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் அனைத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களும் பல



சேவைகள் வழங்கும் சங்கங்களாக மாற்றப்பட்டுள்ளன.

விவசாய நிலத்தை உழுதல், விதைப்பு, பயிர் பாதுகாப்பு, அறுவடை உள்ளிட்ட வேளாண் பணிகளை மேற்கொள்ள, வேளாண் தொழிலாளர்கள் குறைந்துவிட்ட நிலையில், விரைவாகவும், குறித்த நேரத்திலும் விவசாய பணிகள் மேற்கொள்ள, 2938 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் விவசாயிகளுக்கு தேவையான விவசாய இயந்திரங்கள் மற்றும் கருவிகள் இருப்பில் உள்ளன.

**COOPE - வாடகை வாடகை சேவை!**

வேளாண் இயந்திரங்களை நியாயமான வாடகையில் விவசாயிகளுக்கு கொண்டு சேர்ப்பதற்காக 'COOP Eவாடகை' என்ற சேவை கூட்டுறவுத்துறை மூலம் உருவாக்கப்பட்டுள்ளது.

தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் டிராக்டர், மினி டிராக்டர், நெல் நடவு இயந்திரம், நெல் அறுவடை இயந்திரம், கரும்பு அறுவடை இயந்திரம், தானியங்களை தூற்றி சுத்தம் செய்யும் இயந்திரங்கள் மற்றும் ட்ரோன்கள் உள்ளிட்ட விவசாய இயந்திரங்களும், பவர் டில்லர், ரோட்டோவேட்டர் தெளிப்பான்கள் உள்ளிட்ட விவசாய கருவிகளும், விவசாயிகளின் பயன்பாட்டிற்காக உள்ளன.

விவசாய பெருமக்கள் தங்களின் தேவைக்கு பயன்படும் விவசாய இயந்திரங்கள் மற்றும் கருவிகளை 'உழவர் செயலி' மூலம் தங்கள் வட்டாரத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் வாடகை உள்ளிட்ட விவரங்களைப் பெற்று, முன்பதிவு தேதி, நேரம், நிலத்தின் பரப்பு உள்ளிட்ட விவரங்களை பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்த பின்னர் விவசாயிகளின் கைபேசிக்கு, இயந்திரங்கள் மற்றும் கருவிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கான குறுந்தகவல் அனுப்பப்படும். முன்பதிவு செய்த, குறித்த தேதி மற்றும் நேரத்தில் விவசாயிகள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை பயன்படுத்தலாம். மேலும் விவசாயிகள் RCS.TN.GOV.IN இணைய தளத்தின் மூலம் 'COOP Eவாடகை' சேவை மூலமும் பதிவு செய்து பயன்படுத்தலாம்.

மேலும், விவசாயிகள் தங்களின் விவசாய தேவைகளுக்கு தேவையான வேளாண் இயந்திரங்கள் மற்றும் விவசாய கருவிகளை தங்களுக்கு அருகில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களுக்கு நேரில் சென்று பதிவு செய்து குறித்த நேரத்தில் விரைவாகவும் நியாயமான வாடகையிலும் பெற்றும் பயனடையுமாறு கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கேட்டுக் கொண்டுள்ளார்.

### அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் தலைமையில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா

# காரைக்குடியில் முனைவர் கோவி. செழியன் தலைமையில் பட்டிமன்றம்!

## மு.தென்னவன் தொடங்கி வைத்தார்!

சிவகங்கை, ஜுன்18-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி மாநகர தி.மு.க. 16ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு நாள் பட்டிமன்றம் நடைபெற்றது.

சிவகங்கை மாவட்ட கழக செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் நடைபெற்றது.

காரைக்குடி மாநகர மேயரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான எஸ்.முத்து துரை, மாவட்ட அவைத்தலைவர் அ. கணேசன், முன்னாள் எம்.எல்.ஏ., சுப.துரைராஜ், மாவட்ட துணை செயலாளர்கள் திருமதி ஜோன்ஸ் ருசோ, கே.எஸ்.எம்.மணிமுத்து, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், நிர்வாகி கள் சன். சுப்பையா, உதயம் ராஜு, லட்சுமி ராஜ் கணேஷ், பெரி.வயிரவன், சே.சொக்கலிங்கம், அன்பு என்ற சேவியர், போஸ் குணசேகரன், குழ.ஜான் கென்னடி, இராம.அன்பழகன், மெ.பழனியப்பன், துரை. நாகராஜ், காரை சுரேஷ், பா.கணேசன்,

மாமன்ற உறுப்பினர்கள் எம்.கார்த்திகேயன், எஸ். மைக்கேல், ஹேமலதா செந்தில், தெய்வான இளமாறன், கலா. காசிநாதன், நாச்சம்மை சிவாஜி, எஸ் முகமது சித்திக், ஜெ.பிலோமீனா, சுப.ஹரிதாஸ் ஹரிதாஸ் ராணி ஜெய்த்துன் சேட், சந்தியா கார்த்திகேயன், திவ்யா சக்தி, விஷ்ணு பெருமாள், எஸ்.பூமிநாதன் மலர்விழி பழனியப்பன், லில்லி திரேசு அருள் ராஜ், தனம் சிங்கமுத்து, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநகர துணை மேயரும் காரைக்குடி நகர் கழகச் செயலாளருமான என். குணசேகரன் வரவேற்றுப் பேசினார். கலைஞர் நூற்றாண்டு நிறைவு நாள் பட்டிமன்றத்தினை முன்னாள் அமைச்சரும் இலக்கிய அணி புரவலருமான மு. தென்னவன் துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார் . அரசு கொறடா முனைவர் கோவி.செழியன் எம்.எல்.ஏ. தலைமையில் கலைஞர் ஊட்டிய உணர்வே என்ற தலைப்பில் கரூர் முரளி, சரத் பாலா, கலைஞர் தீட்டிய திட்டங்களே என்ற தலைப்பில் நெல்லிக்குப்பம் புகழேந்தி, சைதை சாதிக், ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள்.

மாநகர துணை செயலாளர் சொ. கண்ணன் நன்றி கூறினார்.

பட்டிமன்ற நிகழ்ச்சி ஏற்பாடுகளை காரைக்குடி மாநகர செயலாளர் என். குணசேகரன் தலைமையில் காரைக்குடி நகர்கழக நிர்வாகிகள் செய்திருந்தார்கள்.



நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 101 வது பிறந்தநாள் முன்னிட்டு தொடர் 101 நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது. 46 வது வட்ட செயலாளர் காஜா மைதீன் ஏற்பாட்டில் மேலப்பாளையம் மீன் மார்க்கெட் சாலையில் கழக கொடியேற்று விழா பொது மக்களுக்கு இனிப்பு வழங்கும் விழா மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம் தலைமையில் பகுதி செயலாளர்கள் நமச்சிவாயம், அன்டன் செல்லதுரை ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாநகர செயலாளர் சு. சுப்பிரமணியன் பங்கேற்று கழகக் கொடியேற்றி பொது மக்களுக்கு இனிப்பு வழங்கினார். நிகழ்வில் அலிஃப்மீரான், இனியன், வேங்கை வெங்கடேஷ், ஜவகர், சித்திக்,ஸ்டார் முருகன்,பெப்சி சரவணன், சிவா, நத்தம் கந்தன், காஜா மைதீன், ஜான் கென்னடி, கேபிள் குமரேசன், பத்மா, சௌந்தரம் முத்துராஜ்,மேரி உலகராஜ், பிந்து செய்யது, ராஜேஸ்வரி, ஆனி, நர்மதா திலக், எல்.ஐ.சி.பேச்சிமுத்து, மில்குமார் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### மயிலை த.வேலு தலைமையில் - மயிலை கிழக்குப் பகுதிப் பிரதிநிதி

# கே.நித்தியானந்தத்தின் தந்தை குமார் 16 ஆம் நாள் நினைவஞ்சலி – படத்திறப்பு!

## படத்தை அன்பகம் கலை திறந்து வைக்கிறார்! டி.கே.எஸ்.இளங்கோவன் - நே.சிற்றரசு பங்கேற்பு!

சென்னை, ஜுன் 18 -

சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை கிழக்குப் பகுதி 125வது வட்டம் - பகுதிப் பிரதிநிதி - அண்ணா அறிவாலயம் தொண்டரணி கே.நித்தியானந்தத்தின் தந்தை சி.டி.கே.குமார் அவர்களின் 16 ஆம் நாள் நினைவு அஞ்சலி மற்றும் படத் திறப்பு நிகழ்ச்சி இன்று (18.06.2024 - செவ்வாய்) மாலை 7 மணியளவில் மயிலாப்பூர் எண்.7, ஏகாம்பரம் தெரு, டாக்டர் அம்பேத்கர் பாலம் அருகில் நடைபெறுகிறது-

இந்நிகழ்வுக்கு சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி, மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி.,

125வது வட்டச் செயலாளர் அ.தவநேசன், அ.ரேவதி எம்.சி., தி.விக்னேஸ்வரன், ம. ஜெயகோபி, வி. திலீப்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

அன்னாரது படத்தை கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை திறந்து வைக்கிறார்.

இந்நிகழ்வில் கழக செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., ஆர்.பத்மநாபன், பூச்சி எஸ்.முருகன், எஸ்.ஆஸ்டின், தாயகம் கவி, பி.டி.சி.செல்வராஜ், மாஸ்டர் பெ.சேகர், ஜி.சுகுமாரன், ஜெ.பச்சையப்பன், வி.சி.குமரன், மு. தம்பி துரை, சி.தசரதன், மந்தைவெளி அ.பாபு, வேலுசம்மந்தம், யோகேஷ் ரவி, செல்வி.சௌந்தரராஜன், வி.என். ராஜன், பொன். தனபால்,



எஸ்.முனுசாமி, பி.எல்.தாஸ், ஏ. குமார், எல்.உதயகுமார், வி.வெற்றிவேல், ஏ.தாஸ், மா.பா. அன்பு, கோ. கண்ணன், துரை பார்த்திபன், பா.பொன்னுசாமி,

ராமலிங்கம், அரிராஜன், மெய்யப்பன், செல்வராஜ், செல்வம், தமிழ்கரிகாலன், பன்னீர்செல்வம், சிமன்சேகர், ராமலிங்கம், துரைகண்ணு, செழியன், நாகேந்திரன், மூர்த்தி, துரை, மித்திரன், பாரதி, அஜீத், மணிகண்டன், சத்யநாராயணன், மாறன், செல்வம், ஜனா, திருமயிலை வெங்கடேசன், காத்திகேயன், பாபு, அம்பேத், முருகன், தமிழ்வாணன், நிர்மல், குமரேசன், கோகுல், சூர்யா, தினேஷ், ரஞ்சித், சுகுமார், சூர்யா, தீபக், ஆனந்த், கோமத், மணிகண்டன், தீபன், பிரவின்குமார், இனியன்சம்பத், கன்னியப்பன், பாபு, மோகன், பாஸ்கர், சந்திரன், ராஜா, வேலு, ரவி, ரீகன், பாரத், சரவணன், ஏழுமலை, தனபால், ஏழுமலை, வேலு, புதியவன், கேஸ்மூர்த்தி, கார்த்திக், அசோக், விஜி, சதீஸ்குமார், விஜயகுமார், செல்வமணி, திவாகர், ரவி, விநாயகம், சதா.ஐயப்பன், சந்தோஷ், மதியழகன், மாரிமுத்து, மோகனவேலன் சதிஷ், ரவிச் சந்திரன், ரவிச்சந்திரன், வினோத் குமார், அழகேந்திரன், மதிவாணன், பட்டு பிரகாசம், கலையரசி, வாசுதேவன், புகழேந்தி, விக்ரம், விஜயகுமார், மணிகண்டன், தர்மேந்திரா, பத்மநாபன், கர்ணன், தென்னரசு, ஞானசேகர், ரமேஷ், சசி, ஜெய்கர், வேளாங்கண்ணி, அப்துல்ஹமீத் (எ) ஜின்னா, நரேந்திரன், நரசிம்மன் உள்ளிட்டோர் பங்கேற்று அஞ்சலி செலுத்துகின்றனர்.



தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் கலைஞர் அவர்களின் 101 வது பிறந்தநாள் முன்னிட்டு சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் முன்பு சங்கரன்கோவில் லட்சுமிபுரம் 4ம் தெருவை சேர்ந்த மாற்றுத் திறனாளி மாரிமுத்து என்பவருக்கு மூன்று சக்கர சைக்கிளை தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ வழங்கினார். நிகழ்வில் நகர செயலாளர் மு.பிரகாஷ், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பிச்சையா, நகர துணைச் செயலாளர்கள் முத்துக்குமார், சுப்புத்தாய், தகவல் தொழில் நுட்ப அணி ஜலால், வீர மணிகண்டன், வெங்கடேஷ், ஜான், பாரதிராஜா, ஜெயக்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.